மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் நாமக்கல்

திருசெங்கோடு ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், திருசெங்கோடு வட்டம், திருசெங்கோடு ஊராட்சி ஒன்றியம், சிறுமொளசி ஊராட்சி,அத்திபாளையம் கிராமம், ச.எண்:112/1G1A3 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1அங்குலம் = 33அடி (1:400)

இணையதள எண்: NKL / 2KBB6I9F / 42248 / 2025



வ

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு	:	4.48½ ஏக்கர் (அ) 18150.15 ச.மீ
மனைப்பிரிவு சாலையின் பரப்பு	:	5307.84 ச.மீ
கோரிய மனைகள்	:	89
ஒதுக்கிய மனைகள்	:	89

மனைப்பிரிவு எல்லை

உத்தேச மனைப்பிரிவு சாலை

நிலைமிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடுகள் :

(உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)
உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உத்தேச மனைப்பிரிவு சாலை	:	5307.84 ச.மீ	
பூங்கா–1	:	902.18 ச.மீ	
பூங்கா–2	:	385.55 ச.மீ	
மொத்த பரப்பளவு	:	1287.73 ச.மீ	= 10.03%

பொது உபயோகம் (TNCDBR, 47(8)) –ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட 1% ஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீட்டின் பரப்பளவு	:	64.42 ச.மீ	= 0.502%
TANGEDCO –க்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு	:	64.50 ச.மீ	= 0.502%

விற்பனைக்குரியவை :

EWS மனை எண்கள்	:	1340.24 ச.மீ	= 10.44%
EWS மனை எண்கள்	:	மனைகள் 30 முதல் 33 வரை, மனைகள் 48 முதல் 57 வரை, மனைகள் 69 முதல் 78 வரை.	

மூலை முடக்கு : 12.00மீ அகல சாலைகள் வரை 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்..
2. அரசாணை எண்.181 ஊரக வளர்ச்சித்துறை நாள் 19.12.2020 –ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்திநில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவைபல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின்பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் – குத்தகை பத்திரம் – பட்டா – தானப்பத்திரம் – பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்
7. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் செல்லுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே HT Line, LT Line மற்றும் Telephone Line செல்லுமாயின் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு அதனை மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
12. உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் (ம) மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
13. அரசாணை எண் 18–ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 (ம) 31.01.2020–ன் விதிகள் அனைத்தும் பொருந்தும்.
14. குறைந்த வருவாய் பிரிவிற்கான EWS மனை எண்கள் 30–33, 48–57, 69–78 வரையிலான மனைகளை மனை உட்பிரிவு/மனை ஒருங்கிணைப்பு/மனை உபயோக மாற்றம் செய்தல் கூடாது.
மேலும் 10.00மீ அகல சாலையில் அமையும் EWS மனைகளுக்கு கட்டிட வரம்பு 1.0மீ பொருந்தும்.

APPROVAL No: SWP/ DTCP/ NAMAKKAL/ LAYOUT No: 96 / 2025

தே.புவனேஸ்வரி அளவர் / உதவி வரைவாளர்	செ.சந்தியா வரைவாளர் நிலை–III	பொ.யமுனாதேவி மேற்பார்வையாளர்

Signature Not Verified
Signed by Assistant Director
Location: Namakkal
Date: 2025.04.22 14:23:09

(E-SIGN)
உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்